FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129884

1. District : தூத்துக்குடி PS: Vigilance and Anti. Corruption Year: 2025 FIR No.: 08/25 Date: 24.11.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 120(B), 409, 465,
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 468, 471 and 109 IPC
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2), 13(1)(a) and 12 of PC Act 1988. (as amended in 2018)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 2018 ஆம் ஆண்டு முதல் Date to : 2023 ஆம் ஆண்டு வரை
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 24.11.2025 Time : 14.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 24.11.2025 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 10 கி.மீ. வடக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. பத்மாவது (b) Father's/ Husband's Name : பன்னீர்செல்வம் C
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1974 (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : அரசு அலுவலர் (g) Address : ஊழல் தடுப்பு மற்றும் சிறப்பு புலனாய்வுப் பிரிவு தூத்துக்குடி.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. தே. கி. சிறப்புப் படை வயது 48/2025 S/o. கந்தசாமி, இளநிலை அலுவலர் தூத்துக்குடி மாநகராட்சி. 2. தே.ஞ. ரெங்கநாதன் வயது 64/2025 S/o. சுதாகிருஷ்ணன் இளநிலை உதவியாளர், தூத்துக்குடி மாநகராட்சி. 3. தே.ஞ. கார்த்திகேயன் 42 S/o. தேவராஜ், இளநிலை உதவியாளர், தூத்துக்குடி மாநகராட்சி. 4. தே.ஞ. மணிகண்டன் 37/25 S/o. N. இளங்கோவன், அப்பாஸ்வாமி Software Solutions, Pvt Ltd, Sivagangai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed A.R. Anbazhagan, Rank DSP to take up the Investigation / Refused Investigation / transferred to PS VNAC, Thalavai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/11/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.11.2025 / 15.00 hrs

Name: பெயர் A. பத்மாவதி
Rank: நிலை Grade I Police Constable No. எண் .....

உயர் நிலை முதல் நிலை காவலர்

தஞ்சாவூர் ஊ.த.க. பிரிவு குற்ற எண். 08/2025-ன் தொடர்ச்சி.....

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-

எதிரிகள்:

1) திரு.க.சரவணக்குமார், வயது 48/2025, த/பெ.கந்தசாமி, முன்னாள் ஆணையர் (14.07.2021 to 29.09.2023), தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர். (இருப்பிட முகவரி: 4/12, செங்காளியப்பன் நகர், ரெங்கநாதபுரம், சூலூர், கோயம்புத்தூர்-641402)

2) திரு.ச.ஜெகதீசன், வயது 62/2025, த/பெ. சதாசிவம், முன்னாள் செயற்பொறியாளர், தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகம், தஞ்சாவூர். (இருப்பிட முகவரி: A14 மதுரம் அப்பார்ட்மெண்ட்ஸ், 147 மோகன்ராம் நகர், முகப்பேர், திருவள்ளூர், சென்னை).

3) திரு.த.கார்த்திகேயன், வயது 49/2025, த/பெ.தங்கவேலு, முன்னாள் உதவிப் பொறியாளர் / வரைவாளர் (பொ), தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகம், தஞ்சாவூர். (இருப்பிட முகவரி: 2/125, நடுத்தெரு, குளிச்சப்பட்டு (அஞ்சல்), மாரியம்மன்கோவில் வழி, தஞ்சாவூர்).

4) திரு.கு.மணிசேகரன், வயது 37/2025, த/பெ. N.குணசேகரன், உரிமையாளர்/ஒப்பந்ததாரர், Softberry Solutions Pvt. Ltd., சிவகங்கை. (இருப்பிட முகவரி: No:1, சீனிவாசன் தெரு, சூடாமணிபுரம், காரைக்குடி).

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரிந்த 1) திரு.க.சரவணக்குமார், முன்னாள் ஆணையர், 2) திரு.ச.ஜெகதீசன் (ஓய்வு), முன்னாள் செயற்பொறியாளர், 3) திரு.த.கார்த்திகேயன், முன்னாள் உதவிப் பொறியாளர் ஆகிய அரசு அலுவலர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளனர். கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் உள்ள சுமார் 2,30,000 மெட்ரிக் டன் அளவுடைய பழைய குப்பைகளைத் தரம் பிரித்து அகற்றியதில், முறைகேடுகள் நடந்துள்ளதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், அரசு கடிதம் (ப) எண்.392, நாள்:16.07.2024-இன்படி முன் அனுமதி பெற்று, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை இயக்குநரக குறிப்பாணை ந.க.எண்: PE 96/2024/MAWS/TH, நாள்: 12.08.2024இன்படி முதனிலை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முதனிலை விசாரணையில், கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர் மாநகராட்சிக் குப்பை கிடங்கில் உள்ள பழைய மக்கியக் குப்பைகளை Bio-Mining முறையில் தரம் பிரித்து அகற்றியப் பணிகளில் முறைகேடுகள் நடந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாகக் கண்டறியப்பட்டதன் அடிப்படையில் தொடர்புடைய குற்ற அலுவலர்கள் மற்றும் தனிநபர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை. குற்ற அலுவலர்களான 1) திரு.க.சரவணக்குமார், முன்னாள் ஆணையர், 2) திரு.ச.ஜெகதீசன், முன்னாள் செயற்பொறியாளர் (ஓய்வு), 3) திரு.த.கார்த்திகேயன், முன்னாள் உதவிப் பொறியாளர் ஆகிய அரசு அலுவலர்கள் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளனர். கடந்த 2018ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிக் குப்பைக் கிடங்கில்

உள்ள சுமார் 2,30,000 மெட்ரிக் டன் அளவுடைய பழைய குப்பைகளைத் தரம்பிரித்து அகற்றுவதில், அப்பணிக்கு வேலை உத்தரவு கிடைக்கப்பெற்ற திருவாரூர் M/s. MSG INFRA, கோவில்வெண்ணி என்ற நிறுவனம் சுமார் 77,000 மெட்ரிக் டன் அளவுடையக் குப்பைகளை மட்டுமே தரம் பிரித்து அகற்றியிருந்த நிலையில் தொடர்புடைய நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை கடந்த 22.08.2022-இல் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்சொன்ன M/s. MSG INFRA நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு ரத்து செய்யப்படுவதற்கு முன்னதாகவே, தஞ்சாவூர் மாநகராட்சியின் முன்னாள் ஆணையர் 1) திரு.க.சரவணக்குமார், 2) திரு.ச.ஜெகதீசன் (ஓய்வு), முன்னாள் செயற்பொறியாளர் மற்றும் 3) திரு.த.கார்த்திகேயன், முன்னாள் உதவிப் பொறியாளர் ஆகிய அரசு அலுவலர்கள் சட்டப்பூர்வமற்ற சுயலாபம் அடையும் நோக்கத்தோடு ஒப்பந்த விதிகளை மீறி திரு.கு.மணிசேகரன் என்ற தனிநபருடன் கூட்டுச்சதி செய்து மாநகராட்சி ஒப்பந்ததாரர் பதிவேட்டில் பதிவு செய்யாத அவரது நிறுவனமான Softbery Solutions, Sivagangai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியுள்ளனர். மேலும், குப்பைகளை அளந்து கொடுப்பதற்கும் Bio-Mining பணியைக் கண்காணித்து அறிக்கை கொடுப்பதற்கும் நியமனம் செய்யப்பட்டிருந்த மூன்றாவது முகமையான (Third Party) சென்னை அண்ணா பல்கலைக்கழக சூழ்நிலையியல் கல்விமைய அலுவலர்களை எவ்வித அறிவிப்புமின்றி பணி செய்யவிடாமல் தடுத்தும், Bio-Mining பணிக்குத் தொடர்பில்லாத, தகுந்த தொழில்நுட்ப அனுபவமில்லாதத் திண்டுக்கல், அண்ணா பல்கலைக்கழக கல்லூரியின் பகுதி நிறுவனமான அமைப்பியல் பிரிவு (Department of Civil Engineering) மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் அகற்றப்படாமல் இருந்த குப்பைகளை அளவீடு செய்து அளிக்கப்பட்ட 3 அளவீட்டு அறிக்கைகளை மட்டும் வைத்து மேற்படி Softbery Soultions, Sivagangai நிறுவனம் மூலம் Bio-Mining முறையில் சுமார் 14,363 க.மீ குப்பைகளை மட்டும் தரம்பிரித்து அகற்றிவிட்டு சுமார் 1,42,384 க.மீ அளவுள்ளக் குப்பைகளைத் தரம்பிரித்து அகற்றாமலேயே தரம்பிரித்து அகற்றிவிட்டதாக அளவுப் புத்தகங்களில் போலிப்பதிவுகளை செய்து பொய்யாவணம் புனைந்து, அவ்வாறு பொய்யாகப் புனையப்பட்ட ஆவணத்தை ஏமாற்றும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உட்கருத்துடன் பொய்யாகப் புனைந்து அவற்றை உண்மையான ஆவணங்களாகப் பயன்படுத்தி போலிபில்கள் மூலம் ஒப்பந்ததாரருக்கு (M/S. Softberry Solutions, Sivagangai) தொகை விடுவித்து முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். எனவே, 1 முதல் 3 வரையான குற்ற அலுவலர்கள் தஞ்சாவூர் மாநகராட்சி குப்பைக் கிடங்கில் உள்ள குப்பைகளை Bio-Mining முறைப்படித் தரம்பிரித்து அகற்றும் பொறுப்பினை ஒப்படைக்கப்பட்டிருந்த, அந்த சொத்தைப் (பொறுப்பை) பொறுத்து கையாளும் நிலையில் இருந்து அரசுக்கு நேர்மையற்ற முறையில் நிதியிழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்கண்ட செயல்கள் மூலம் மேற்சொன்ன குற்ற அலுவலர்கள் மற்றும் மேற்சொன்ன M/S. Softberry Solutions, Sivagangai நிறுவனத்தின் உரிமையாளர் (தனிநபர்) சட்டப்பூர்வமற்ற ஆதாயம் அடையவும், அதனால் அரசுக்கு (ரூ.1,42,384 கனமீட்டர் x ரூ.672) ரூ.9,56,82,048/- அளவிற்கு

நிதியிழப்பு ஏற்படவும் காரணமாயிருந்துள்ளார்கள். மேலும், அரசு பணியாளர்களாக இருந்து குற்றமுறு கெட்டநடத்தை செயலில் ஈடுபட்டுள்ளார்கள். தனிநபரான சிவகங்கையைச் சேர்ந்த Softbery Solutions என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கு.மணிசேகரன் என்பவர் மேற்சொன்ன குற்ற அலுவலர்களின் குற்ற செயல்களுக்கு உடந்தையாக இருந்துள்ளார். எனவே, அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப-4) துறை, தலைமைச் செயலகம் சென்னை அவர்களின் அரசு கடிதம் (ப) எண்.581, நாள்: 08.10.2025ன்படியும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக முதற்கட்ட விசாரணை அறிக்கை PE 96/2024/MAWS/TH, Dated: 24.11.2025-இன்படியும் வழக்குப்பதிவு (Regular Case) செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இன்று, 24.11.2025ஆம்தேதி, 14,00 மணிக்கு, தஞ்சாவூர் மாநகராட்சியில் பணிபுரிந்த 1) திரு.க.சரவணக்குமார், (முன்னாள் ஆணையர்), 2) திரு.ச.ஜெகதீசன் (ஓய்வு), முன்னாள் செயற்பொறியாளர், 3) திரு.த.கார்த்திகேயன், முன்னாள் உதவி பொறியாளர் மற்றும் தனிநபரான சிவகங்கையைச் சேர்ந்த Softbery Solutions என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கு.மணிசேகரன் ஆகியோர் மீது தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, குற்ற எண்.08/2025 u/s 120(B), 409, 465, 468, 471 and 109 IPC and Sec 13(2), 13(1) (a) and 12 of PC Act 1988 as amended in 2018இன்படி வழக்குப் பதிவு செய்தேன்.

24/11/2025
Inspector of Police
VACC, Thanjavur.

அய்யா, இந்த முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்களின் பெயரில் வழக்குப் பதிவு செய்ய சம்பந்தப்பட்ட துறையின் முன் அனுமதி நகல் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் புலன் விசாரணைகாக அலுவலக கோப்பிலும் வைக்கப்பட்டது.

24/11/2025
Inspector of Police,
VACC, Thanjavur.